புலம் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்
Vol.4: Issue - S.4, May-2024
ISSN : 2583 - 0139

# சீர்மிகு வளர் தமிழ் ஆய்வு

யாதும் ஊரே
யாவரும் கேளிர்

## பதிப்பாசிரியர்கள்

முனைவர் ச.தங்கமணி
முனைவர் சி.மைக்கேல் சரோஜினி பாய்
முனைவர் தி.மே.சா.சந்திரமணி ஜெபராணி
முனைவர் தி.சாந்தி

PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES
To Discern the Truth is Wisdom– Quarterly Journal

Scanned with ACE Scanner

சீர்மிகு வளர் தமிழ் ஆய்வு

புலம் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

&

அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்,

கொடைக்கானல்.

# பன்னாட்டுக் கருத்தரங்கச் சிறப்பிதழ்

**பதிப்பாசிரியர்கள்**

முனைவர் ச.தங்கமணி

முனைவர் சி.மைக்கேல் சரோஜினி பாய்

முனைவர் தி.மே.சா.சந்திரமணி ஜெபராணி

முனைவர் தி.சாந்தி

Scanned with ACE Scanner

Vol.4: Issue – S.4, MAY – 2024

ISSN : 2583 - 0139

# புலம் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

மெய்ப்பொருள் காண்பது அறிவு - காலாண்டிதழ்

# PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES

To Discern the Truth is Wisdom– Quarterly Journal

**பதிப்பாசிரியர்கள்**

முனைவர் ச.தங்கமணி

முனைவர் சி.மைக்கேல் சரோஜினி பாய்

முனைவர் தி.மே.சா.சந்திரமணி ஜெயராணி

முனைவர் தி.சாந்தி

**ஆசிரியர் குழு**

முனைவர் மனோன்மணி தேவி

முனைவர் ஜா.அமிர்தலெனின்

முனைவர் ச.கோபிநாத்

முனைவர் ரா.பிரேம் குமார்

முனைவர் க.வெள்ளியங்கிரி

முனைவர் சா.யமுனாதேவி

முனைவர் இரா.கோகுல்

**நிறுவனர்**

முனைவர் ம.சிவபாலன்

மசிவன் பதிப்பகம்

விழுப்புரம்

editor@pulamejournal.com

editor@masivanpathippagam.com

pulamejournal@gmail.com

+919486069548

018872_2/90

© Copyright to PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES 2024 • All Rights Reserved

zenodo LinkedIn Google Scholar MLA International Bibliography ORCID



Scanned with ACE Scanner

# பொருளடக்கம்


1. ஸ்ரீ அரச கேசரி சிவன் ஆலயம் - சிங்கப்பூர்
திருவாட்டி. வைவி 1

2. சித்தர் பாடல்களில் இறப்பும் இறவாப் பெருநிலையும்
முனைவர் கு. திவ்யா 3

3. நீதி இலக்கியங்களில் விருந்தோம்பல்
பா.தினேஷ்குமார், முனைவர் பே.மஹேஸ்வரி 8

4. அம்பை சிறுகதைகளில் இழையோடும் பெண்களின்
தற்கொலை குறித்தான பதிவுகள்
முனைவர் செ.துளசி 12

5. பழந்தமிழரின் இசைக்கலை
முனைவர் அ.தேன்மொழி 15

6. பழந்தமிழ் இலக்கியத்தில் தெய்வங்கள்
முனைவர் பா.நேருஜி 19

7. எண்ணத்தின் சுய ஆட்சி மனிதனெனும் காட்சியாம்
சா. பரமேஸ்வரி 23

8. திருமூலரின் திருமந்திரத்தில் ஆரோக்கியமான குழந்தை பிறப்பு
பா. பரமேஸ்வரி 27

9. ஞானமும் வாழ்வும்
முனைவர் ஆர் .எஸ்.கே. பாக்கியலட்சுமி 30

10. ஔிற்பிச்சையாரின் பெண்மொழிப் புனைவுத்திறன்
முனைவர் அ.பாரதிராணி 34

11. வள்ளுவரும் இயங்கியல் சிந்தனைகளும்
முனைவர் பா. பாலச்சந்தர் 37

12. இலக்கண நூல்களும் எழுத்துகளின் பிறப்பும்
முனைவர் கி. பாலமுருகன் 40

13. அகநானூற்று செவிலி கூற்றுப் பாடலில் ஆற்றாமை
மு.பிரியங்கா, முனைவர் மா.சிதம்பரம் 45

14. ஆற்றுப்படை நூல்களில் பாண் மரபினரின் வழிகள்
முனைவர் ஜோ.பிரின்ஸ் 48

15. வனம் நாவலில் இருளர் இனவரைவியல் கூறுகள்
முனைவர் தி.பிருந்தா 52

16. எட்டுத்தொகையில் சூழலியல் சிந்தனைகள்
முனைவர் பூ.பூங்கோதை 56


Scanned with ACE Scanner

# சித்தர் பாடல்களில் இறப்பும் இறவாப் பெருநிலையும்

முனைவர் கு. திவ்யா, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு),
பாத்திமா கல்லூரி, மதுரை.

## முன்னுரை

மனிதராகப் பிறந்து, தம் புலன் அடக்கி, பற்றனைத்தும் துறந்து, இறைவனைத் தேடி சித்தி பெறத் துடிப்போர் சித்தராகின்றனர். இந்த சித்தர் மரபானது நம் மண்ணில் என்று தோன்றியது என உறுதிபட அறிய இயலவில்லை. என்றாலும், இன்றும் அம்மரபு தொடர்கின்றது. இந்த சித்தர்கள் பற்றற்று, தனித்து வாழ்ந்து, தவம் செய்து, அத்தவப்பயனைத் தாமே அடையக்கருதாமல் தம் ஞானத்தால் அறிந்தனவற்றைப் பாடல்களாக இயற்றி இவ்வுலகு பயனுற வழங்கலாயினர். அவையே சித்தர் இலக்கியம் என்று அழைக்கப்படுகின்றன. அப்பாடல்கள் வழி பல அறக்கருத்துக்களையும், தத்துவக்கருத்துக்களையும், சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும், மருத்துவக் கருத்துக்களையும் வழங்கலாயினர். குறிப்பாக சித்தர்களின் தத்துவங்கள் உடல், உயிர் குறித்த பல செய்திகளைத் தம்முள் பொதிந்து வைத்துள்ளன. உலகம் முழுவதுமே மிகப்பெரிய விவாதத்திற்கு உரிய பொருளான இறப்பு குறித்தச் செய்திகள் பல சித்தர் இலக்கியங்களில் பொதிந்து கிடக்கின்றன. அவற்றைத் தொகுத்து கூர்ந்து நோக்குகையில் அவை இரு வேறுபட்டவையாக உள்ளமையை அறியமுடிகின்றது. அதாவது, சில சித்தர்களின் பாடல்களில் உயிர் நிலையற்றது, இறப்பு வருவது உறுதியானது எனக்கூறி, நிலையாமையை வலியுறுத்தி வாழ்வைச் சீர்படுத்த அழைத்தலைக் காண முடிகின்றது. வேறு சில சித்தர் பாடல்களில் இறப்பு கட்டாயமானது அல்ல, இறப்பைக் கடந்த இறவாப் பெருநிலையை மனிதன் எய்த முடியும் என்னும் கருத்தினைக் காண முடிகின்றது. இவ்வாறு சித்தர் பாடல்களில் இடம்பெறும் இறப்பு மற்றும் இறவாப் பெருநிலை குறித்த கருத்துக்களை இக்கட்டுரை விரிவாக ஆராய்கின்றது.

## சித்தர் பாடல்களில் இறப்பு

இறப்பு என்பது மனிதனின் உயிர் உடலை விட்டுப் பிரிந்துவிடுதல் ஆகும். "இதயத் துடிப்பு, மூளை செயல்பாடு, சுவாசம் முதலான உடலின் இயக்கங்கள் அனைத்தும் நின்றுவிடுதல். (Death is defined as the Cessation of all vital functions of the body including the heart beat, brain activity (including the brain stem) and breathing."[1] என மருத்துவம் இறப்பிற்கு விளக்கம் அளிக்கின்றது. உலகின் அனைத்து சமயங்களும் இறப்பிற்குப் பின்னான உயிரின் நிலை குறித்து கருத்து மாறுபாடு கொண்டிருந்தாலும் இறப்பு உண்டென்பதை ஏற்றுக் கொள்ளவே செய்கின்றன. சித்தர்களும் தம் பாடல்களில் இந்த இறப்பு குறித்து பேசுகின்றனர். நிலையாமைக் கோட்பாட்டை வலியுறுத்தும் நோக்கில் சித்தர்கள் தம் பாடல்களில் இறப்பு உறுதி என்பதை வலியுறுத்துகின்றனர். செல்வம் நிலையற்றது. அப்படியே அது நிலைத்தாலும், அந்த செல்வத்தாலோ, ஒருவர் வகிக்கும் அதிகாரத்தாலோ அம்மனிதரை நிலைக்கச் செய்தல் இயலாது என பல சித்தர்கள் தம் பாடல்களில் வலியுறுத்துகின்றனர். திருவள்ளுவர் என்னும் சித்தர் இந்நிலையாமையைத் தமது திருவள்ளு ஞானத்தில் இடம் பெறும் பாடல் வழி வலியுறுத்துகின்றார்.

"வீடான மூலச் சுழிநாத வீட்டில் விளங்கும் விந்து

நீடாழி லோகந்தழைத்துப் பெருகியு நின்றிலங்குந்

தேடாதழித்த பொருளான பொக்கியந் தேடியென்ன

காடான நாடு சுடுகாடு சேர்வதுங் கண்டிலரே." (திருவள்ளுவ ஞானம், பாடல்:5 )

எனப்பாடுகின்றார். அதாவது, காலம் காலமாக மனிதன் பொருளைத் தேடித்தேடித் தொலைக்கின்றான. மீண்டும் அதையே தேடுகின்றான. ஆனால் அவன் அடைவதோ சுடுகாடே என்கின்றார். செல்வத்தை நிலையெனத் தேடுவது மட்டுமின்றி, மனிதன் மண்ணையும் நிலையானதென எண்ணுகின்றான். இத்தகு எண்ணத்தாலே போர் மற்றும் பகைமை வளர்ந்து

Scanned with ACE Scanner

யாதும் ஊரே யாவரும் கேளிர்

# வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

## இருபதாவது பன்னாட்டுக் கருத்தரங்கம்

### பங்கேற்புச் சான்றிதழ்

திருமிகு / முனைவர் / பேரா. ... திவ்யா ...

அவர்கள் 18 & 19-05-2024 ஆகிய நாட்களில் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தோடு இணைந்து நடத்தப்பட்ட வளர் தமிழ் ஆய்வு மன்ற இருபதாவது பன்னாட்டுக் கருத்தரங்கில் பங்கேற்றார் / பங்கேற்று சித்தர் பாடல்களில் இறப்பும் இறைமை பெருநிலையும் ......... என்னும் தலைப்பில் கட்டுரை வழங்கினார்.

தாயம்மாள் அறவாணன்
தலைவர்

ந. லெனின்
செயலாளர்

தி.மே.ஜோ. சுந்தரமணி ஜெபா
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்

க.சி.சி. ராணி
பொருளாளர்

Scanned with ACE Scanner